## முதலமைச்சரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம்!

# 375 பேரூராட்சிகளுக்கும் 100 நாள் வேலைத் திட்டம் கொண்டுவர நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

**சென்னை, மார்ச் 24 -**

**சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கே.என்.நேரு, முதலமைச்சரிடம் அனுமதி பெற்று, 375 பேரூராட்சிகளுக்கும் 100 நாள் வேலைத் திட்டத்தைக் கொடுத்திட நடவ டிக்கை எடுக்கப் படும் என்று குறிப்பிட்டார்.**



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**கே.மாரிமுத்து:** திருத்துறைப் பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியுடன் அருகில் உள்ள ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு:** தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு அருகிலுள்ள ஊராட்சிகளை நகர்ப்புர உள்ளாட்சிகளுடன் இணைப்பது குறித்து அமைக்கப்பட்ட மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 375 ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளோடு இணைக்க உத்தேச அறிக்கை வெளியிடப்பட்டது. திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சிக்கு அருகிலுள்ள ஊராட்சிகளை கோட்டூர் ஊராட்சியோடு இணைத்து பேரூராட்சியாகத் தரமுயர்த்துவது குறித்து மாநில அளவிலான குழுவிற்கு எடுத்துச்செல்கையில், மாநில அளவிலான குழுவினால் பரிந்துரைக்கப்படவில்லை. இருப்பினும், இதுபோன்ற கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளதால்,

எதிர்காலத்தில் இக்கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.மாரிமுத்து:** முத்துப்பேட்டை பகுதிக்கு அரசு கலைக் கல்லூரி அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களின் பதிலைக் கேட்டேன். கோட்டூர் ஊராட்சி என்பது விவசாயத் தொழிலாளர்களை நிரம்ப கொண்டிருக்கிற பகுதியாகும். வணிக நிறுவனங்களோ, பொருளாதார வளர்ச்சியோ, பிற தொழில் நிறுவனங்களுடைய வேலைவாய்ப்புகளோ இல்லாத காரணத்தினால், கிராம ஊராட்சியாகவே அது இருப்பதுதான் பொருத்தமானது என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். முத்துப்பேட்டை பகுதிக்கு குறிப்பாக கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்தான் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது. குறிப்பாக, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டை போன்ற பகுதிகளுக்கு அதுதான் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில், திருத்துறைப்பூண்டி பேரூராட்சிப் பகுதியில் கிட்டத்தட்ட 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிப்பதால் 20 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், இப்போது நாள்தோறும் வெறும் 7 இலட்சம் லிட்டர்தான் தண்ணீர் அங்கே கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீண்டு கொண்டே இருக்கிறது என்பதனை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**அமைச்சர் கே.என்.நேரு:** ஏற்கெனவே, கோட்டூர் ஊராட்சியைச் சுற்றியிருக்கிற பகுதிகளை தரமுயர்த்தி, பேரூராட்சியாக ஆக்க வேண்டுமென்று அரசின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், குழுவால் அதை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிற்காலத்தில் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்றுதான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் அடுத்த கேள்விக்குச் சென்று, உடனடியாகக் குடிதண்ணீர் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, குடிதண்ணீரைப் பொறுத்தவரை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சை போன்ற மாவட்டங்களிலுள்ள பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டியை பொறுத்தவரை, என்ன தேவை என்பதை ஆராய்ந்து, 20 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவை என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கான source, அதற்கு எங்கிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள்? அந்தளவுக்கு கொடுக்க இயலுமா என்பதையெல்லாம் அதிகாரிகளோடு கலந்துபேசி, அப்படிக் கொடுக்க இயலுமானால் உடனடியாகக் கொடுக்க முயற்சி எடுக்கப்படும். அப்படிக் கொடுக்க எந்த வாய்ப்பும் இல்லையென்றால், அதற்கான புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு என்ன முடியும்? அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கண்டறிந்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.மாரிமுத்து:** திருத்துறைப் பூண்டி நகராட்சி ஒரு பழமையான நகராட்சி. கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள நகராட்சி. கிட்டத்தட்ட 33 ஆயிரம் மக்கள் தொகை கொண்டிருக்கிற நகராட்சி. அங்கு குடியிருப்புகளே 8 ஆயிரத்திற்கும் மேல் இருக்கிறது. நகரமும் விரிவடைந்து கொண்டே வருகிறது. எனவே, எல்லா தகுதிகளும் இருக்கிற திருத்துறைப்பூண்டி நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாகத் தரமுயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி நகராட்சியை தரமுயர்த்துவதைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அப்படி எல்லா தகுதிகளும் இருக்குமானால், இந்த ஆண்டே இப்போதே, இந்தச் சட்டமன்ற கூட்டத்திலே தரமுயர்த்துவது குறித்து அறிவிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** தருமபுரி மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், நகரத்தில் இணைப்பதாக ஒருசில ஊராட்சிகளின் பட்டியல் வெளி வந்தது. அந்தப் பகுதி மக்கள் உங்களுடைய கருத்தைக் கேட்டு, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏ.ஜெட்டி அள்ளி, தடங்கம், தருமபுரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட லக்கியம்பட்டி, சோகத்தூர் பகுதிகளிலுள்ள மக்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள். ஏனென்றால், கிராம ஊராட்சியில் நிறைய விவசாய நிலங்கள் இருக்கின்றன. அந்த விவசாய நிலங்களெல்லாம் பாதித்துவிடும். நகராட்சியில் நிறைய விவசாய நிலங்களையெல்லாம் plot போட்டு flat ஆகிவிடும். அதனால், விவசாய நிலங்கள் பாதிக்காமல் என்னுடைய கருத்துகள் இல்லாமல் அந்த கிராம மக்களுடைய கருத்துகளைக் கேட்டு, அமைச்சர் அவர்கள் நல்ல முடிவு எடுப்பார் என்ற நம்பிக்கையோடு அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** இந்தக் கேள்வி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கேள்வியாகும். இந்தக் கேள்வி தனிப்பட்ட வெங்கடேஷ்வரன், தருமபுரிக்கானது அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் சில பேர் நான் குறிப்பாகச் சொன்னால் கந்தர்வக்கோட்டையை ஏன் பேரூராட்சியாகத் தரமுயர்த்தவில்லை என்று கேட்கிறார். பல இடங்களில் ஏன் நகராட்சியாகத் தரமுயர்த்தவில்லையென்று கேட்டிருக்கிறார்கள். நான் குறிப்பாக எந்த ஊராட்சியும் நகரத்தோடு இணைப்பதற்கு எங்களுக்கு ஒன்றும் தேவை என்பதல்லாம் அல்ல. அவர்கள் ஓரளவுக்கு இந்த 100 நாள் வேலைத் திட்டம் கிடைக்காத காரணத்தால்தான் விவசாயிகள் அதை இணைக்கக்கூடாதென்று பெரிய அளவிலே அதற்கான மறுப்பைத் தெரிவித்து வருகிறார்கள். நான் உங்களுக்கு சொல்கிறேன். நகராட்சி குறித்து இப்போது உறுப்பினர் மாரிமுத்து இப்போது பேசினார்; நகராட்சி நாள்தோறும் விரிவடைந்து கொண்டே இருக்கிறது. நாள்தோறும் எப்படி விரிவடைந்து கொண்டு வருகிறதென்றால், இந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தள்ளி முதலிலே ஒரு வீடு கட்டுகிறார்கள். அந்த ஒரு கிலோ மீட்டருக்கு நாங்கள் குழாயும் போட வேண்டும்; தண்ணீரும் கொடுக்க வேண்டும்; சாக்கடை இணைப்பும் கொடுக்க வேண்டும்; அப்படி வருகிறபோது, நகரம் விரிவாகிக் கொண்டே வருகிறபோது அரசினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு இடம் தேவை.

அரசாங்கத்திற்கு புறம்போக்கு நிலமாக இருந்தால் அதில் இலகுவாக இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இன்னொன்றைச் சொல்கிறேன்; பக்கத்திலிருக்கிற, அருகிலே இருக்கிற ஒரு நகராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் இருக்கிறது; LED light இருக்கிறது. சாலைகள் பராமரிக்கப்படுகிறது. பள்ளிக் கட்டடங்கள் சரியாக இருக்கிறது. அங்கன்வாடிக் கட்டடங்களும் சரியாக இருக்கிறது. ஆனால், அடுத்த கிராமம் என்று போகிறபோது, வசதி இல்லை. அந்தக் கிராமத்தில் இருக்கிறவர்கள் நாங்கள் மட்டும் வரி கட்டவில்லையா, எங்களுக்கு அந்தத் திட்டம் வரக்கூடாதா என்று எங்களிடம் கேட்கிறார்கள். இப்படி mixed response ஒருத்தர் வேண்டுமென்று கேட்கிறார்; ஒருத்தர் வேண்டாமென்று சொல்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்கிறேன்; அப்படியென்றால் 100 நாள் வேலைத் திட்டம் போகுமென்பது உங்கள் கருத்து. இந்த ஆண்டு 375 ஊராட்சிகளை இணைத்திருக்கிறோம். எனவே, அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவிலே பலதரப்பட்ட வகையிலே, பல தரப்பட்ட மக்களிடம் பேசப்பட்டு, எந்தெந்த ஊராட்சிகளைச் சேர்க்கலாம்; விவசாயமல்லாத ஊராட்சிகளைச் சேர்க்கலாமென்று குழு முடிவுசெய்து, 375 ஊராட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலேயும் அவர்களுக்கு objection இருக்குமானால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லப்பட்டு, மீண்டும் அந்தக் குழுவிலே அது பரிசீலிக்கப்படும். இந்த 100 நாள் வேலைத் திட்டத்தைப் பொறுத்தளவில் இந்த ஓராண்டு, ஏற்கெனவே நகர்ப்புறத்திலே ஒரு வார்டுக்கு ஓர் இடத்திலே மொத்தம் ஒரு 20 பேரூராட்சிகளை கொடுத்துக் கொண்டிருந்தோம். இன்றைக்கு அதையெல்லாம் நிறுத்திவிட்டு, இந்த 375 பேரூராட்சிகளுக்கும் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரிடம் நாங்கள் அனுமதி கேட்டிருக்கிறோம். அப்படி வருமானால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் 100 நாள் வேலைத் திட்டத்தினை நகர்ப்புற உள்ளாட்சியிலிருந்து அந்த 100 நாள் வேலைத் திட்டத்தைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதையும் தாண்டி நீங்கள் தேவையில்லையென்று சொன்னால், நீங்கள் எழுதிக் கொடுங்கள். ஆனால், நான் இன்னொன்றைச் சொல்கிறேன்; நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த ஊரோடு அந்த ஊரைச் சேர்த்தால் நாம் தலைவராக வர முடியாதென்று ஆட்களைக் கிளப்புகிறார்கள். இது ஒரு விஷயம். இதற்கு நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். அப்படிச் சொன்னால் அது தவறாகப் போய்விடும். எனவே, எல்லார்க்கும் எல்லாம் என்பது இந்த ஆட்சியினுடையது. யார் வேண்டுமானாலும் தலைவராக வரலாம். இந்த இடம் நமது strength majority ஆக நாம் தலைவராக வர முடியாதென்று ஆட்களைத் தட்டிவிட்டு பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். அது போன்று இருந்தால் கடைசி வரை ஒத்துக்கொள்ள மாட்டேன். அதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.





பெருங்களத்தூர் வடக்கு பகுதி மற்றும் தாம்பரம் மாநகர திமுக இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தாம்பரம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவர், பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஆட்ட நாயகன் விருதை கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு முதல் பரிசு ஒரு இலட்சம் ரூபாயையும் மற்றும் கோப்பை Tambaram CC அணியினருக்கும் இரண்டாம் பரிசை Vicky Select அணிக்கு ரூபாய் ஐம்பதாயிரம் ரூபாய் மற்றும் கோப்பையையும் தாம்பரம் மாநகர செயலாளரும், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. இரண்டாம் பரிசு பெற்ற Vicky Select அணியினருக்கும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.


